23-06-2013 Dinathanthi



சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் சுரங்க ரெயில் பாதையை படத்தில் காணலாம்.



சென்னை கிண்டி மேம்பாலத்துக்கு மேலே மெட்ரோ பறக்கும் ரெயில் பாதை அமைக்கப்படுவது சிறப்பம்சம். தரையில் இருந்து பிரமாண்ட தூண்களுடன் 72 அடி உயரத்தில் இந்த பாதை கட்டப்படுவதை படத்தில் காணலாம்.

**குளு, குளு வசதியுடன் உருவாகும் சுரங்க பாதை ரெயில் நிலையங்கள்**

# 5½ கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் சுரங்க பாதை தயார்

## உயர் அதிகாரி தகவல்

சென்னை, ஜூன்.23-
மெட்ரோ ரெயில் போக்குவரத்திற்காக சுரங்க பாதை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை 5½ கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்க பாதை தயாராகிவிட்டது. அதுபோல உலகத்தரத்தில் குளு, குளு வசதியுடன் சுரங்க ரெயில் நிலையங்களும் அமைக்கப்படுகின்றன.

### சென்னை மெட்ரோ ரெயில்

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் ரூ.14 ஆயிரத்து 600 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்படுகிறது.

முதல் வழித்தடம் வண்ணாரப்பேட்டை - சென்னை விமான நிலையம் இடையே 23 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்படுகிறது. இதில், வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை 14.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதையும், சைதாப்பேட்டையில் இருந்து சென்னை விமான நிலையம் வரை 8.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு பிரமாண்டமான தூண்கள் அமைத்து பறக்கும் பாதையும் அமைக்கப்படுகிறது.

### உலகத்தரத்தில் ரெயில் நிலையங்கள்

இரண்டாவது வழித்தடம் சென்னை சென்டிரல் - பரங்கிமலை இடையே 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்படுகிறது. சென்டிரலில் இருந்து திருமங்கலம் வரை 9.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதையும், திருமங்கலத்தில் இருந்து பரங்கிமலை வரை 12.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதையும் அமைக்கப்பட்டு வருகிறது.

ஒருபுறம் மெட்ரோ ரெயில் பறக்கும் பாதையும், மற்றொருபுறம் சுரங்கப்பாதையும், உலகத்தரத்தில் பறக்கும் ரெயில் நிலையங்களும், குளு, குளு வசதியுடன் சுரங்கப்பாதை ரெயில் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 11 டனல் போரிங் மிஷின்கள்

மெட்ரோ ரெயில் சுரங்க பாதை அமைப்பதற்காக சீனாவில் இருந்து கப்பலில் 11 ராட்சத டனல் போரிங் மிஷின்கள் கொண்டு வரப்பட்டன. இப்போது அத்தனை மிஷின்களும் முழுவீச்சில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

சென்னையில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பார்க்கில் இருந்து எழும்பூரை நோக்கி இரண்டு டனல் போரிங் மிஷின்கள் சுரங்க பாதை அமைத்து வருகின்றன. இதில், ஒரு மிஷின் 436 மீட்டர் தூரத்திற்கும், மற்றொரு மிஷின் 562 மீட்டர் தூரத்திற்கும் சுரங்க பாதை அமைத்துள்ளன.

### சைதாப்பேட்டையில்...

சைதாப்பேட்டையில் இருந்து அண்ணா மேம்பாலத்தை நோக்கி சுரங்க பாதை அமைக்கும் மிஷின்களில் ஒன்று 245 மீட்டர் தூரத்திற்கும், மற்றொன்று 67 மீட்டர் தூரத்திற்கும் சுரங்கப்பாதை அமைத்துவிட்டன.

சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்காவில் இருந்து அண்ணா மேம்பாலம் வரை சுரங்கப்பாதை அமைத்து வரும் ராட்சத டனல் போரிங் மிஷின்களில் ஒன்று 214 மீட்டர் தூரத்திற்கும், மற்றொன்று 102 மீட்டர் தூரத்திற்கும் சுரங்கப்பாதைகளை அமைத்துவிட்டன. ஷெனாய் நகரில் இருந்து திருமங்கலம் நோக்கி சுரங்க பாதை தோண்டும் மிஷின்களில் ஒன்று 800 மீட்டர் தூரத்திற்கும், மற்றொன்று 99 மீட்டர் தூரத்திற்கும் சுரங்க பாதைகளை அமைத்துவிட்டன.

### 5½ கிலோ மீட்டருக்கு சுரங்க பாதை தயார்

வண்ணாரப்பேட்டையில் இருந்து சென்டிரல் வழியாக எழும்பூர் வரை சுரங்க பாதை தோண்டிக்கொண்டிருக்கும் மிஷின்களில் ஒன்று 1,465 மீட்டர் தூரத்திற்கும், மற்றொன்று 1,230 மீட்டர் தூரத்திற்கும் சுரங்கப்பாதை அமைத்துவிட்டது. மே தின பூங்காவில் இருந்து சென்டிரல் வரை சுரங்கப்பாதை தோண்டும் ஒரு டனல் போரிங் மிஷின் நேற்று வரை 193 மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை அமைத்துள்ளது.

மெட்ரோ ரெயில் இரண்டு வழித்தடங்களிலும் 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுமார் 36,308 மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. இதில், 5,424 மீட்டர் (17,795 அடி) தூரம் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு உள்ளது. அதாவது 5½ கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை தயாராகிவிட்டது.

### கூவம் ஆற்றுக்கு அடியில் சுரங்கப்பாதை

சுரங்கப்பாதை அமைக்கும் பணியில், சென்டிரல் - ஓமந்தூரார் அரசினர் தோட்டம் இடையே கூவம் ஆற்றுக்கு அடியில் அமைக்கப்படும் சுரங்கப்பாதைதான் மிக முக்கியமானதாகவும், சவால் நிறைந்ததாகவும் உள்ளது. மற்ற இடங்களில் சுரங்கப்பாதை, ரோட்டின் மேற்பரப்பில் இருந்து பூமிக்குள் சராசரியாக 17 மீட்டர் ஆழத்தில் அதாவது 56 அடியில் சுரங்க ரெயில் பாதையின் தண்டவாளம் அமைந்திருக்கும். ஆனால், கூவம் ஆற்றுக்குள் அமைக்கப்படும் சுரங்க ரெயில் பாதை சற்று கூடுதல் ஆழத்தில் அமைக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

### கோயம்பேடு - பரங்கிமலை

சுரங்க ரெயில் பாதை அமைக்க சில ஆண்டுகள் ஆகும். ஆனால், அதற்கு முன்னதாக பறக்கும் பாதையில் மெட்ரோ ரெயில் இயக்கப்படும். முதல்கட்டமாக அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதையில் மெட்ரோ ரெயில் இயக்கப்பட உள்ளது.

கோயம்பேடு - பரங்கிமலை இடையே இதுவரை 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு பிரமாண்ட தூண்களுடன் ரெயில் தண்டவாளம் அமைக்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள 4 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தண்டவாளம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### கிண்டி மேம்பாலத்துக்கு மேல் பறக்கும் பாதை

சென்னையில் உள்ள மேம்பாலங்களில் கிண்டி மேம்பாலம்தான் மிகப்பெரியது என்று பெயர் பெற்றுள்ளது. இப்போது இந்த பெயரை மெட்ரோ பறக்கும் ரெயில் பாதை தட்டிச்செல்ல இருக்கிறது. கிண்டி மேம்பாலத்துக்கு மேலே மெட்ரோ ரெயில் பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. தரையில் இருந்து 72 அடி உயரத்தில் அதிநவீன தொழில்நுட்பத்தில் பிரமாண்ட தூண்களுடன் பறக்கும் பாதையை அமைக்கிறார்கள். இந்த பணியை அப்பகுதி வழியாக செல்லும் மக்கள் ஆச்சரியத்துடன் சற்று நேரம் நின்று பார்த்துவிட்டுப் போகிறார்கள்.

வெளிநாடுகளைப் போல இத்தனை அடி உயரத்தில் ரெயில் பாதை அமைக்கப்படுவதும், அயல்நாட்டில் கடலுக்கு அடியில் ரெயில் பாதை அமைக்கப்பட்டிருப்பதைப் போல கூவம் ஆற்றுக்கு அடியில் மெட்ரோ ரெயில் சுரங்க பாதை அமைக்கப்பட இருப்பதும் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்தான்.

### அடுத்த ஆண்டு மெட்ரோ ரெயில் ஓடும்

கோயம்பேடு - பரங்கிமலை இடையே கோயம்பேடு, அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், சிட்கோ, ஆலந்தூர், பரங்கிமலை ஆகிய 8 இடங்களில் உலகத்தரத்தில் பறக்கும் ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு இறுதியில் இந்த பாதையில் சோதனை ஓட்டமும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மெட்ரோ ரெயில் போக்குவரத்தைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

### ஏ.சி. ரெயில் பெட்டிகள்

பிரேசில் நாட்டில் குளு, குளு ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு சென்னை வந்து கொண்டிருக்கின்றன. இதுவரை 4 பெட்டிகள் கொண்ட ஒரு ரெயில் வந்துவிட்டது. கோயம்பேடு பணிமனையில் 800 மீட்டர் நீளத்திற்கு 'டெஸ்ட் டிராக்' அமைக்கப்படுகிறது. இந்த பணி முடிந்ததும் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடத்தப்படும். அதன்பிறகு கோயம்பேடு - பரங்கிமலை இடையே பணிகள் முடிய, முடிய ஒவ்வொரு பகுதியாக சோதனை ஓட்டம் நடத்தப்படும்.

மொத்தம் 168 மெட்ரோ ரெயில் பெட்டிகளை தயாரித்துக்கொடுக்க பிரேசில் நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. 4 பெட்டிகள் கொண்ட ஒரு மெட்ரோ ரெயிலின் மதிப்பு ரூ.32 கோடி ஆகும்.

### மணிக்கு 35 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும்

குளு, குளு வசதி, தானியங்கி கதவுகளுடன்கூடிய மெட்ரோ ரெயில் பெட்டி ஒன்றில் ஒரே நேரத்தில் 1,276 பேர் உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும் செல்லலாம். ஒரு பெட்டியில் ஊனமுற்றோர், முதியோருக்கு தலா 2 இருக்கைகள் உள்பட 44 இருக்கைகள் இருக்கின்றன. ஊனமுற்றோருக்கான வீல் சேர் வைக்க தனி இடம் உண்டு.

மணிக்கு 80 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் திறன் மெட்ரோ ரெயில் பெட்டிக்கு இருக்கின்ற போதிலும், சென்னையில் குறுகிய தூரத்திலே அடுத்தடுத்து ரெயில் நிலையங்கள் வரும் என்பதால் மணிக்கு 35 கிலோ மீட்டர் வேகத்தில்தான் இயக்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிலைய அதிகாரி ஒருவர் கூறினார்.